Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 2, Special Issue - 1, November 2022 E-ISSN: 2583-0481

# Flower Jobs in Sangam Literature

**Dr. S. Anusuyadevi,** Assistant Professor of Tamil, G. Venkataswamy Naidu College, Kovilpatti,
Affiliated with Manonmaniam Sundaranar University,Tirunelveli,Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-2277-4440**
**DOI: 10.5281/zenodo.7312384**

## Abstract

*During the Sangam period, not only men but women also worked. Women have taken up occupations such as fish selling, salting, making slag, bleaching clothes, guarding the granary etc. Women have also helped their husbands in the economic sphere through associational practices. Apart from that, bringing up the child to be the best, cherishing and protecting them, teaching the morals of life, and marrying the eldest son who wants to marry with the approval of the family were the main duties of the Sangam woman. The leader (Thalaivan) goes to search for material before marriage and after marriage for his life. That is the division of matter. During the Sangam period ploughing, metallurgy, fishing, salt making, carpentry, weaving, laundry, jewellery making, animal husbandry, pottery, trade, manufacture of handicrafts, hunting, honey gathering, robbery, barter, millet keeping, fish selling, salt selling, dancing, Pearl bathing, conch bathing etc. took place. This article tries to probe flower-selling facts from Sangam literature.*

**Keywords:** Sangam Literature, Women, Professions.

## References

[1] K.Gandhi. *Tamilarkal Pallakkavalakkangalum Uappikaigalum*. International of Institute of Tamil Studies, Chennai.
[2] P. Mathaiyan. *Sanga Illakkithail Velan Samuthayam*. New Century Books House, Chennai.
[3] S.Bala Subramaniyan. *Sanga Kala Makalir*. Narumalar Pathippagam, Chennai, First Edition, 1983.
[4] A.M.Parma Sivantham. *Thoolivalam*. Tamil Kalai Pathipakam, Chennai, First Edition, 1964.
[5] A.M.Parma Sivantham. Tamilar Vazlvu. Valiyammal Education Trust, Chennai, First Edition, 1990.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சங்க இலக்கியங்களில் மகளிர் தொழில்கள்

**முனைவர் சு. அனுசுயாதேவி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கோ. வெங்கடசுவாமி நாயுடு கல்லூரி, கோவில்பட்டி, திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனர்
பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-2277-4440
DOI: 10.5281/zenodo.7312384

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க காலத்தில் ஆடவர்கள் மட்டுமல்லாது பெண்களும் தொழில் செய்துள்ளனர். பெண்கள் மீன்விற்றல், உப்புவிற்றல், கள் தயாரித்தல், ஆடை வெளுத்தல், தினைப்புனம் காத்தல் முதலிய தொழில்களைச் செய்துள்ளனர். சங்க அகப்பாடல்களின்வழிப் பெண்களும் பொருளீட்டி பொருளாதாரத்தில் தம் கணவனுக்கு உதவியாகவும் இருந்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் குழந்தையைச் சிறந்தவர்களாக வளர்த்தல், போற்றிப் பாதுகாத்தல், வாழ்வியல் நெறிகளைக் கற்பித்தல், குடும்பத்தாரின் ஒப்புதலுடன் தலைவி விரும்பும் தலைமகனை, அவளுக்கு மணமுடித்து வைத்தல் ஆகியன சங்ககாலப் பெண்ணின் தலையாய கடமைகளாக இருந்தது. இல்வாழ்விற்கு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள பொருள் இன்றியமையாமையாயிற்று. தலைவன் வாழ்விற்காக மணத்திற்கு முன்பும் மணத்திற்குப் பின்பும் பொருள்தேடச் செல்வதுண்டு. அதுவே பொருள்வயிற் பிரிவாகும். சங்க காலத்தில் உழவுத்தொழில், உலோகத்தொழில், மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், தச்சுத்தொழில், நெசவுத்தொழில், சலவைத்தொழில், அணிகலத்தொழில், கால்நடை வளர்த்தல், மண்பாண்டத் தொழில், வணிகம், கைவினைப் பொருள்களின் உற்பத்தி, வேட்டையாடுதல், தேன் எடுத்தல், கொள்ளையடித்தல், பண்டமாற்று, தினைப்புனம் காத்தல், மீன்விற்றல், உப்பு விற்றல், நடனமாடுதல், முத்துக் குளித்தல், சங்கு குளித்தல் போன்றவை நடந்தேறின.*

**குறிப்புச் சொற்கள்:** சங்க இலக்கியம், மகளிர், தொழில்கள்.

**முன்னுரை**

வினையே ஆடவர்க்கு உயிரென வினைமேற்கொள்ளல் ஆடவர் கடமையாகக் கூறப்பட்டாலும், சங்ககாலத்தில் மகளிரும் தாம் வாழ்ந்த நில இயல்பிற்கு ஏற்றவகையில் தொழில் செய்துள்ளனர் என்பது சங்க இலக்கியங்கள்வழி அறிய முடிகின்றது. தம் வாழ்க்கைக்கும் தன் குடும்பத்திற்கும் வேண்டிய பொருளீட்டுவதில் ஆர்வமும், முயற்சியும் உழைப்பும் உடையவராய்ப் பொறுப்புணர்ச்சியுடன் வாழ்ந்துள்ளனர்.

**பூவிற்றல்**

உழவர் மகளிர் தெருக்களில் பூ விற்றதைப் பாலை பாடிய பெருங் கடுங்கோ கூறுகிறார்.

**துகிகை யன்ன துய்த்தலைப் பாதிரி**

**வாலிதழ் அலரிவண்டுபட ஏந்திப்**
**புதுமலர் தெருவுதொறும் நுவலும்**
**நொதுமலராட்டி (நற்., பா. 118:8-10)**

பெண் ஒருத்தி மலர் விற்றதைப் பாண்டியன் மாறன் வழுதி தம்முடைய செய்யுளில் கூறுகிறார்.

**துய்த்தலை இதழ்பைங் குருக்கத்தியொடு**
**பித்திகை விரவுமலர் கொள்ளிரோ என**
**வண்டு சூழ் வட்டியள் திரிதரும் (நற்., பா. 97:7-8.)**

பூவிற்ற பெண்களும் பூவை நெல்லுக்குப் பண்ட மாற்றுசெய்தனர் என்பதைச் சொல்லாமலே விளங்குகிறது.

**தினைப்புனம் காத்தல்**

சங்க இலக்கியத்தில் குறிஞ்சிநிலப் பெண்கள் தினைக் கதிர்களைக் கிளி, குருகு, குருவி போன்ற பறவைகள் கவரா வண்ணம் காவல் காத்த செய்திகள் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலத்து இளமகளிரைக் காவல் காக்க அவளின் பெற்றோர்களே அனுப்பி வைத்த செய்தி காணப்படுகின்றது. மலைக்குகையின் மேல் அமைக்கப்பட்ட பரணியில் அமர்ந்து கிளிகளை ஓட்டிய செய்தி,

**களிறு அணந்து எய்தாக் கல்முகை இதணத்து**
**சிறுதினைப் படுகிளி எம்மொடு ஓப்பி**
**மல்லல் அறைய மலிர்சுனைக் குவளை (அகம்., பா. 308:8-10)**

அகநானூற்றில் காணப்படுகிறது. மேலும்,

**அமைஅறுத்து இயற்றிய வெவ்வாய்த் தட்டையின்**
**...பெருவரை அடுக்கத்துக் குரிஇ ஓப்பி (அகம்., பா. 388:2-5)**

என்பதால், தினைக்கதிர்களை உண்ணவரும் பறவைகளை ஓட்டும் மென்மையான தொழிலைச் செய்தனர். என்றாலும் உயரமான பரண் அமைத்து செயல்பட்டதன் மூலம் அங்கு விலங்குகளின் செயல்பாடு இருந்திருக்க வேண்டும் என்பதும் அவற்றிற்கு அஞ்சாத நிலையில் அப்பெண்கள் காவல் புரிந்தனர் என்றும் அறியமுடிகிறது.

**மீன் விற்றல்**

கடலும் கடல்சார்ந்த நிலப்பகுதி நெய்தல் நிலம் எனப்பட்டது. இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் கடலில் கலம் செலுத்தி மீன் பிடித்தலைத் தம்தொழிலாகக் கொண்டவர்கள். இவர்கள் பரதவர் என அழைக்கப்பட்டனர். பார்ப்பவர்களுக்கு வியப்பைத் தரும் அளவிற்கு ஏராளமான மீன்களைப் பரதவகுலப் பெண்டிர் அருகில் உள்ள ஊருக்குள் எடுத்துச் சென்று வாணிகம் செய்துவிட்டு அதற்கு ஈடாகத் தமக்குத் தேவையான பிறபொருள்களைப் பெற்று வருவர். இக்கருத்தினை விளக்கும் வகையில் அகநானூற்றுப் பாடலொன்று,

**திமிலோன் தந்த கடுங்கண் வயமீன்**
**தழையணி அல்குல் செல்வத் தங்கையர்**

**விழவிஅயர் மறுகின் விலையெனப் பகரும் (அகம்., பா. 320:2-4)**

என்று குறிப்பிடுகின்றது. மேற்கூறிய பாடலின்வழி, தம் தமையன்மார் பிடித்து வந்த மீன்களைத் தம் பேச்சுத் திறனால் திறமையாகக் கூவி விற்பாள் பரதகுலப் பெண் என்பதும் அறிய முடிகின்றது. இதன்மூலம் சங்ககாலப் பெண்களின் விற்பனைத் திறனும், தமக்குத் தேவையான பிற பொருளைப் பெற்று தன் வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்து கொண்ட பாங்கையும் அறிய முடிகின்றது. மேலும், மீன்பிடிக்கும் தொழிலில் பாண்மகன் மட்டுமல்லாமல் பாண்மகளும் ஈடுபட்டுள்ளமையை அகநானூறு சுட்டிக் காட்டுகின்றது.

**நாண்கொள்நுண் கோலின் மீன்கொள் பாண்மகள்**
**தான்புனல் அடைகரைப் படுத்த வராஅல் (அகம்., பா. 216:1-2)**

என்று கூறுகிறது. இப்பாடலின்மூலம் நெய்தல் நிலப் பெண் புனலை அடுத்த கரையில் வரால்மீனைப் பிடித்தக் குறிப்புக் கிடைப்பதனால் மீனை விற்கும் திறன் அல்லாது மீனைப் பிடிக்கும் நுணுக்கமும் அறிந்தவளாகவும் பெண் இருந்திருக்கின்றாள் என்பது புலனாகின்றது.

**உப்புவிற்றல்**

நெய்தல் நில மகளிரின் மற்றொரு தொழில் உப்பு விற்றல். இந்நிலத்தில் உப்பு விற்கும் ஆண்களை உமணர் என்று அழைப்பர். உமணர்கள் உப்பு விற்கச் செல்லும்போது தன் மனைவியை உடன் அழைத்துச் செல்வர். உப்பு வணிகரின் இளம்பெண்கள் ஊருக்குள் சென்று உப்பினைக் கூவி விற்பர்.

**சிலகோல் எல்வளை தெளிர்ப்ப வீசி**
**நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்**
**சேரிவிலைமாறு கூறலின் (அகம்., பா. 140:5-8)**

என்பதால், தன்னிடம் இருக்கும் உப்பைக் கொடுத்துத் தனக்கு வேண்டிய நெல்லைத் தருமாறு கேட்டதன்வழி, அப்பெண் தன் தொழில் திறமையினாலும் தன் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய தனித்திறனுடன் விளங்கினாள் என்பதும், தன் கணவனுடன் நெடுந்தூரம் நடைப்பயணமாக வந்து தொழில்புரியும் அளவிற்கு மனவலிமையுடன் செயல்பட்டாள் என்பதும் தெளிவாகின்றது. உப்பளங்களில் வயல்கள் மூலம் கிடைக்கும் வெண்ணிற உப்பை உமணப்பெண்கள் எருது பூட்டப்பட்ட வண்டியில் சென்றும், தலையில் உப்பினைச் சுமந்து சென்றும் வீதிதோறும் கூவிவிற்று பொருளீட்டும் இயல்பினராக இருந்ததை,

**பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்**
**இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த**
**உப்பின் கொள்ளைச் சாற்றி**
**என்றூழ் விடர குன்றம்போகும்**
**கதழ்கோல் உமணர் காதல் மடமகள்” (அகம்., பா. 140:1-5)**

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

**வேளாண்மைத் தொழில்**

சங்க காலத்தில் வேளாண்மை முதன்மைத் தொழிலாக இருந்துள்ளது. சங்ககால வேளாண்மையில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் பங்கு கொண்டனர். பெரும்பாலான மக்கள் உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர். மகளிர் வேளாண்மையிலும் வேளாண்மைச் சார்ந்த பிற தொழில்களிலும் ஈடுபட்டுக்கடுமையாக உழைத்தனர்.

**அரிந்துகால் குவித்த செந்நெல் விளைஞர் (அகம்., பா. 116)**

என்ற பாடல்வரிகள் மகளிரும் கதிர் அறுப்பதிலும் அவற்றைக் கட்டுகளாகக் கட்டி வைப்பதிலும் ஆடவர்க்கு உதவி செய்தனர் என்பதை உணர்த்துகிறது. வயல்களில் பணிசெய்து கொண்டிருக்கும் மகளிர் வீடுகளிலும் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு பொருளாதார வளர்ச்சிக்குத் துணைநின்றனர். வீடுகளில் கோழி, பசுக்கள் போன்றவற்றை வளர்த்துப் பொருளீட்டும் பணியையும் செய்துள்ளனர்.

**மனைஉறை கோழி மறனுடையச் சேவல் (அகம்., பா. 227)**

என்ற வரிகள் விளக்குகின்றன. இவ்வாறாக வேளாண்மை பொருளாதாரத்தில் பெண்டிருக்குத் தலைமை இடம் இருந்ததை அறியமுடிகிறது. நானிலத்து வாழும் மக்களும் தத்தம் நிலத்து விளைந்த விளைபொருட்களைப் பிற நிலங்களுக்கு எடுத்துச் சென்று விற்று அதற்கு ஈடாக நெல்லையும் பிற பொருட்களையும் பெற்று வந்தனர்.

**அரியல் பெண்டிர்**

கள்ளானது அரித்து எடுக்கப்படுவதால் அரியல் எனப்பட்டது. அதனைக் காய்ச்சி விற்கும் பெண்டிர் அரியல் பெண்டிர் எனப்பட்டனர். பெண்கள் கள் காய்ச்சினர்என்பதற்கான சான்றுகள் காணப்படுகிறது. இதைப் போன்று பரதவ மகளிர் கள் காய்ச்சிய செய்தியும், காய்ச்சி வடித்தெடுத்துப் புளித்துக் களிப்பேறிய கள்ளினைப் பரதவர் உண்டு மகிழ்ந்தனர் என்ற செய்தி,

**ஓங்குநிலை ஒட்டகம் செய்தி,**

**.... பரதவர் மடுப்ப (சிறுபாண்., பா.வ.154-159)**

என்பதின் வழி புலப்படுகிறது. மேலும், அகநானூற்றுப் பாடலொன்றில், கள் விற்கும் பெண்ணொருத்தி தன் இடையில் பானையில் கள்ளைச் சுமந்து வந்து போர் வீரர்களுக்குக் கொடுக்கின்றாள். இதனை,

**அரியல் பெண்டிர் அல்குற் கொண்ட**

**...செருவேட்டுச் சிலைக்கும் செங்கண் ஆடவர் (அகம்., பா. 157:1-4)**

என்று குறிப்பிடுகின்றது. மேற்கூறிய பாடலிலிருந்து சங்க காலத்து பெண்களில் ஒருசிலர் கள் தயாரித்து விற்பனை செய்யும் தொழில் செய்தனர் என்பதும் இதுபோன்ற கடினமான தொழிலிலும் மகளிர் ஈடுபட்டிருந்ததைக் காணமுடிகிறது.

**புலைத்தி**

பண்டைய காலத்தில் தூய்மையான ஆடைகளை உடுத்தப் பெருந்துணையாய் இருந்தவர்கள் ஆடை வெளுக்கும் தொழிலில் ஈடுபட்ட பெண்களே ஆவர். இப்பெண்டிர்

புலைத்தி, புலைத்தியர் என்ற சொல்லால் அழைக்கப்பட்டனர். இப்பெண்கள் நாள்தோறும் உவர்நிலத்தில் கிணற்றைத் தோண்டி அங்குக் கிடைக்கும் நீரில் ஊறவைத்து துணிகளை வெளுப்பர். உவர் நீரானது துணிகளின் அழுக்கை நீக்கும் தன்மை உடையது. இவ்வாறு துவைத்த துணிகளுக்குச் சோற்றுக் கஞ்சியிட்டு உலர்த்தினர்.

**பசைவிரல் புலைத்தி நெடிதுபிசைந் தூட்டிய**
**பூந்துகில்...(அகம்., பா. 387:6-7)**
**பசைகொன் மென்விரல் பெருந்தோட் புலைத்தி (அகம்., பா. 34:11)**

மேற்கூறப்பட்ட பாடலின்வழி, சங்க காலத்துப் பெண் மற்றவர்களது ஆடைகளைச் சுத்தம் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்தாள் என்பதும், உவர்நிலத்து நீர் ஆடைகளின் அழுக்கை அகற்றும் என்றும் ஆராய்ந்து அறியும் அறிவியல் திறன் பெற்றிருந்தாள் என்பதும் புலனாகின்றது.

**விறலியர்**

சங்ககாலச் சமுதாயத்தில் தாம் கற்ற கலையைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த கலைஞர்கள் இருந்தனர். தம் உள்ளக் குறிப்புப் புறத்தே வெளிப்படுமாறு (விறல்பட) ஆடும் மகளிரை விறலியர் என்பர். கலையின் ஒன்பது சுவைகளும் புறத்தே புலப்படுமாறு நடிக்கும் திறன் வாய்ந்த விறலியர் பலர் இருந்தனர் என்பதைச் சங்க நூல்கள் வாயிலாக அறிய முடிகின்றது. விழாவெடுக்கும் பழைய ஊரில் ஆடுகின்ற விறலியின் பின்னால் மத்தளம் முழங்கும் என்பதனை, **ஆடுமயில் முன்னதாகக்... முழவன் (அகம்., பா. 352:4-6)** என்னும் பாடல் வரிகளால் அறியலாம்.ஆடற் கலையில் வல்லவர்களான விறலியர் தாம் கற்ற கலையைத் தொழிலாகக் கொண்டு மன்னர்களிடம் பரிசுகளைப் பெற்றுத் தந்துள்ளனர் என்பதும் சங்க காலத்து பெண்களில் ஒருசாரார் கலையில் வல்லவர்களாகவும் அதைக் கொண்டு பொருளீட்டும் திறனுடையவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதும் புலனாகின்றது.

**முடிவுரை**

சங்க காலத்தில் ஆடவர்கள் மட்டுமல்லாது பெண்களும் தொழில் செய்துள்ளனர். பெண்கள் மீன்விற்றல், உப்புவிற்றல், கள் தயாரித்தல், ஆடை வெளுத்தல், தினைப்புனம் காத்தல் முதலிய தொழில்களைச் செய்துள்ளனர். சங்க அகப்பாடல்களின்வழிப் பெண்களும் பொருளீட்டி பொருளாதாரத்தில் தம் கணவனுக்கு உதவியாகவும் இருந்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் குழந்தையைச் சிறந்தவர்களாக வளர்த்தல், போற்றிப் பாதுகாத்தல், வாழ்வியல் நெறிகளைக் கற்பித்தல், குடும்பத்தாரின் ஒப்புதலுடன் தலைவி விரும்பும் தலைமகனை, அவளுக்கு மணமுடித்து வைத்தல் ஆகியன சங்ககாலப் பெண்ணின் தலையாய கடமைகளாக இருந்தது. பெண்கள் கடின உழைப்போடு தாம் மேற்கொண்ட தொழிலில் தனித்திறனுடனும் விளங்கியுள்ளனர் என்பதை இக்கட்டுரை புலப்படுத்துகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] க.காந்தி. *தமிழர்கள் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

[2] மாதையன். பெ. *சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம்.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.

[3] பாலசுப்பிரமணியன், சி. *சங்க கால மகளிர்.* நறுமலர்ப்பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1983.

[4] பரமசிவனாந்தம். அ.மு. *தொழில் வளம்.* தமிழ்க்கலைப் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை, 1964.

[5] பரமசிவனாந்தம். அ.மு. *தமிழர் வாழ்வு. வள்ளியம்மாள் கல்வி அறம்,* சென்னை, முதற்பதிப்பு, 1990.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.